Registered as a Newspaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -19 | 04-08-2003 | திங்கட்கிழமை | ஓசை 167



படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
அனைத்திற்கும்

Jaffna Road, Kilinochchi. யாழ் சாலை, (ரி-8437) கிளிநொச்சி.


## பேச்சுக்கள் தொடர புலிகள் கோரியிருப்பது போன்று

# இரு தரப்பினாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இடைக்கால நிர்வாக திட்டவரைவு அவசியம்

### யாழ். இல் ஜப்பானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறுவதற்குப் புலிகள் கோரியிருப்பது போன்று இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்டவரைவு முன்வைக்கப்படுதல் அவசியம் என்று ஜப்பானின் சிரேஷ்ட பிரதி வெளிவிவகார அமைச்சர் வெற்சுரோ ஜானோ தெரிவித்துள்ளார். யாழ்.துரையப்பா மகாவித்தியாலயத்தில் ஜப்பானிய அரசின் உதவியுடன் இடம்பெற்ற மருத்துவ முகாமைப் பார்வையிட வந்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

டோக்கியோ மாநாடு நடைபெற்று மூன்று மாதகாலம் ஆகியும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவில்லை. இவ்விடயத்தில் நாம் மிகவும் அவதானமாக இருக்கிறோம்.

அரசும் புலிகளும் பேச்சு மேசையில் ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இது ஆக்கபூர்வமான இடைக்கால நிர்வாகச் சட்டவரைவின் ஊடாகவே சாத்தியப்படும். இதற்கு இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆக்கபூர்வமான

(8ஆம் பக்கம் பார்க்க...)



ஜப்பான் சிரேஷ்ட பிரதி அமைச்சர் கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயத்திற்கு அழைத்துவரப்படுகின்றார்.

### பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

## ஜப்பானிய துணை அமைச்சரிடம் யாழ்.பொது அமைப்புக்கள் மகஜர்

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் கையளிக்கப்பட வேண்டும், உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்கள் மீளவும் குடியமர்த்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பன உட்பட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.குடாவில் பல்வேறு அமைப்புக்கள் யாழ். சென்ற ஜப்பானிய சிரேஷ்ட வெளிவிவகார அமைச்சரிடம் மனுக்களை கையளித்துள்ளனர்.

வலிகாமம் கோட்ட பொது

(8ஆம் பக்கம் பார்க்க...)

## ஜப்பான் பிரதியமைச்சர் இன்று சிறிலங்காத் தலைவர்களுடன் பேச்சு

(கொழும்பு)

ஜப்பானின் சிரேஷ்ட பிரதி வெளிவிவகார அமைச்சர் வெற்சிறோ ஜெனோ இன்று சிறிலங்கா அரச தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோரை சந்தித்து அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 'தமிழ்ப் பெயர்க்கையேடு' இன்று கிளி.யில் வெளியீடு

தமிழீழ விடுதலைப்புலிகளின் தமிழ்வளர்ச்சிக்கழகத்தின் "தமிழ்ப் பெயர்க்கையேடு" நூல் வெளியீட்டு விழா இன்று நடைபெறவுள்ளது. கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு வே.வ.தமிழேந்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வரவேற்புரையினை சதா தனபாலசிங்கமும் வெளியீட்டு உரையினை வெ.இளங்குமரன் அவர்களும், மதிப்பீட்டுரையை நூலறிஞர் சொக்கன் அவர்களும் ஆய்வுரையினை பேராசிரியர் அ.சண்முகதாஸ், பண்டிதர் பரந்தாமன், ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

விழாவில் இளங்கோ நூலினை வெளியிட்டு வைக்க வே.பரமநாத பிள்ளை பெற்றுக் கொள்வார்.

## வடமராட்சி கடலில் 24 மணி நேரமும் கட்டுப்பாடின்றி மீன் பிடிக்க அனுமதி

### -நேற்றைய சந்திப்பில் படைத்தரப்பு அறிவிப்பு

வடமராட்சி கடற்பரப்பில் 24 மணி நேரமும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி மீன்பிடித் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

மீனவர்கள் மீதான சிறிலங்கா கடற்படையின் கெடுபிடிகள் தொடர்பாக மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், படையதிகாரிகளுக்கும் இடையே பருத்தித்துறையில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் நேற்றுக் காலை பேச்சுக்கள் இடம்பெற்றன.

சர்வதேச கண்காணிப்புக் குழுவின் கடற்கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் இச்சந்திப்பு இடம் பெற்றது.முன்னதாக வடமராட்சி வடக்கு மீனவர்களின் சமரசப் பிரதிநிதிகள் மற்றும் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் தொடர்பான விபரங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டனர்.காலை 10 மணிக்கு ஆரம்பமான பேச்சுக்கள் மதியத்தைத் தாண்டியும்

(8ஆம் பக்கம் பார்க்க...)

## மீனவர் தொடர்பான மாநாட்டில் செய்தியாளர்களுக்கு அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நேற்று போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தலைமையில் நடைபெற்ற முத்தரப்பு மாநாட்டிற்கு குறிப்பிட்ட செய்தியாளர்களையே படைத்தரப்பு அனுமதித்துள்ளது.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு இடம்பெற்ற இச் சந்திப்பு தொடர்பான செய்தி சேகரிப்பதற்காக

(8ஆம் பக்கம் பார்க்க...)

## 23 பேர் கைது

சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முற்பட்ட 23 இலங்கையர்களைக் கடற்படையினர் கைது செய்திருக்கிறார்கள்.

வென்னப்புவவிலிருந்து 12 மைல் தூரத்திலுள்ள கடற்பிரதேசத்தில் இவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இரண்டு சிறிய படகுகளும் அங்கு தரித்து நின்ற இயந்திர மீன் பிடிக்கப்பலும் கைப்பற்றப்பட்டன.

(8ஆம் பக்கம் பார்க்க...)

## அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்று வன்னி திரும்புகிறார்

(கிளிநொச்சி)

கிழக்கு மாகாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் இன்று வன்னி திரும்புகின்றார்.

கடந்த மாதம் 28 ஆம்திகதி கிழக்கிற்குச் சென்று அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களுக்கு விஜயம்செய்து விடுதலைப்புலிகளின் தளபதிகள், போராளிகள், அரசஅதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடியதுடன் ஊடகவியலாளர் சந்திப்புக்களிலும் கலந்துகொண்டார்.




திருகோணமலை மாவட்டத்தளபதி பதுமன் சேனையூரில் கணனிப்பயிற்சி நிலைய பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைக்கிறார்

## நெடுந்தீவில் ஓராண்டு சேவையைப் பூர்த்தி செய்யும் திலீபன் மருத்துவ சேவைக்குப் பாராட்டு

நெடுந்தீவில் மருத்துவ சேவையில் இன்று ஓராண்டைப் பூர்த்தி செய்யும் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினை நெடுந்தீவுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் பாராட்டி வாழ்த்தியுள்ளனர்.

இது குறித்து விடுக்கப்பட்ட பாராட்டுச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 12 ஆண்டுகளாக அரசின் அடிவருடிக்குழுக்களால் அடக்குமுறைக்குள் வாழ்ந்து கொண்டிருந்த எம்தீவக மக்கள் எப்போ எமக்கு விடுதலை கிடைக்கும் என ஏங்கிக் கொண்டிருந்த போது, அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் 18.06. 2002 எம் தீவகத்திற்கு அரசியல் பணிகளுக்காக காலடி வைத்த வீர மறவர்களான விடுதலைப் புலிகளை மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டெழுந்து வரவேற்றனர்.

(8ஆம் பக்கம் பார்க்க...)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

சிங்கராயர் உதயசங்கர் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல 691414221v) முறிகண்டிக்கும் கிளிநொச்சிக்குமிடையில் தவறிவிட்டது. தயவு செய்து கிளி-ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். சன்மானம் வழங்கப்படும். (3601)

### N.E.C

A-9 கிளிநொச்சி.
Day Class வர்த்தகப்பிரிவு தனித்துவமிக்க ஆசிரியர்களால் 10-8-2003 ஆரம்பம். கணக்கீடு G.பரணிதரன் B.Com (Hons) Acc.Spi, பொருளியல் T.திவ்வியரூபன் B.Com (Hons) வணிகக் கல்வி S.சத்தியானந்தன் வவுனியா, கொழும்பு பிரபல ஆசிரியர். (3602)

# வடிகால்களில் குப்பை கொட்டுவதால் வீதிகள் சீர்கெடும் நிலை

(அலுவலக செய்தியாளர்)

தற்போது புனரமைக்கப்பட்டு வரும் கிராமப்புற வீதிகளின் வடிகால்களில் காணி உரிமையாளர்கள் குப்பை கூழங்களைக் கொட்டுவதன் காரணத் தினால் மீண்டும் வீதிகள் சீர்கெடும் நிலை உருவாகியுள்ளது.

கிளிநொச்சி திருநகர் கனகபுரம் பாடசாலை வீதி அண்மையில் புனரமைக்கப்பட்டு வீதி இருமருங்கும் வடிகால் கால்வாய்கள் வெட்டப்பட்டு மழைநீர் வழிந்தோடுவதற்கு ஏற்றுவாறு சீர்செய்யப் பெற்றது.

இவ்வடிகால்களின் அருகில் உள்ள காணி உரிமையாளர்கள் வேலியின் தடிகளை வெட்டிவிட்டு கழிவுகளை மேற்படி வடிகால்களில் கொட்டி வருகின்றனர்.

இதன் காரணமாக வடிகால் வழியாக மழைநீர் செல்லமுடியாது வீதியைக் குறுக்கறுத்து மழை வெள்ளம் பாய்வதினால் மீண்டும் மேற்படி வீதிசீர்கெடும் நிலை உருவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# முல்லைத்தீவு – முள்ளியவளை வீதியில் வீதித்தூசியினால் பெரும் அவலம்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு-முள்ளியவளை வீதியில் போடப்பட்டுள்ள கிரவல் மண்ணினால் எழும் தூசியினால் பொதுமக்களும், வர்த்தகர்களும் பெரும் சிரமங்களை சந்தித்து வருகின்றனர். குறிப்பாக முள்ளியவளைப் பகுதியில் முள்ளியவளை ஐயனார் கோவிலடியில் இருந்து தண்ணீரூற்று காவல் பணிமனைவரையான சுமார் இரண் டரைக்கிலோமீற்றர் நீளமான வீதிக் குக் கிரவல் பரவப்பட்டுள்ளது. இப்பகுதியில் பெரும்பாலும் வீதிப் போக்குவரத்து அதிகமாக இருப்பதுடன் வர்த்தக நிலையங்களும் நான்கு பாடசாலைகளும் பெருமளவு குடியிருப்புக்களும் உள்ளன. இவ்வீதியால் வாகனங்கள் வேகமாகச் செல்வதால் எழும் தூசிமண்டலத்தால் உந்துருளிகள், ஈருளிகளில், செல்வோர் விபத்துக்குள்ளாகும் நிலை ஏற்படுகின்றது.

அத்துடன் கிரவல் தூசி வர்த்தக நிலையங்களிலுள்ள பொருட்களில் படிவதால் சுகாதாரச் சீர்கேடும் பொருட்கள் பழுதடையும் நிலையும் ஏற்படுகின்றது. குடியிருப்புக்களில் உள்ளவர்களுக்கு சுவாச நோய்கள் ஏற்படும் அபாயமும் உள்ளது என பலதரப்பினரும் முறைப்பாடு செய்கின்றனர். (ஆ)

## இடம் பெயர் சேவை

(உடையார்கட்டு)

விசுவமடுப் பிரதேசத்தில் முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், மாவட்ட கால்நடை வைத்திய சுகாதார பிரிவும் இணைந்து இடம்பெயர் சேவையின் மூலம் கால்நடைகளுக்கு தடுப்பூசி செயற்கைமுறை முறைச் சினைப்படுத்தல், நலமடித்தல், சினைப்பரிசோதனை என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விசுவமடுப்பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் சிறிதர் தெரிவித்துள்ளார். (19)


## வாழ்த்துகின்றோம்

குருத்துவத்தின் குருமணியாய் குன்றாது மலர்ந்திருக்கும் யூட் அமலதாஸ் அடிகளாரின் ஆறாண்டு நிறைவில் அடியெடுக்கும் வேளையில் அமலன் அருள் வேண்டி அளம்பில் இளைஞர்கள் அகம் மலர வாழ்த்துகிறோம்.

அளம்பில் இளைஞர் ஒன்றியம்.

(3770)



விடுதலைப்புலிகள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்

## தமிழர் வாழ்க்கைமேடு

### நூல் வெளியீட்டு விழா

இடம்: கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்
காலம்: 04.08.2003 பிற்பகல் 02.00 மணி

நிகழ்ச்சி:
வரவேற்புரை : திரு.சதா. தனபாலசிங்கம் அவர்கள்.
தலைமை : திரு செ.வ.தமிழேந்தி அவர்கள்
வெளியீட்டுரை : திரு. வெ. இளங்குமரன் அவர்கள்
வெளியிடுபவர் : திரு.க.இளங்கோ அவர்கள்
ஏற்பவர் : திரு.பரமநாதபிள்ளை அவர்கள்
மதிப்பீட்டுரை : மூதறிஞர் க.சொக்கன் அவர்கள்
ஆய்வுரை : பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள
பண்டிதர். வீ.பரந்தாமன் அவர்கள்
நன்றியுரை : திரு. அறிவழகன் அவர்கள்

தமிழினம் தனது தனித்தன்மை சிறப்பு என்பவற்றைப் பேணவும், இன அடையாளம் அழிந்து விடாமற் காக்கவும், வழிகாட்டியாக நிற்கும் இவ்வரிய நூலினைப் பெற்றுக்கொள்ளவும், விழாவைச் சிறப்பிக்கவும் தமிழின்பாற்பற்றுடைய அனைவரையும் விடுதலைப் புலிகள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் அன்புடன் அழைக்கின்றனர்.

(நூலின் விலை உரூபா 300.00)

தமிழ் வளர்ச்சிக்கழகம்,
தமிழீழம்.

(சி.8452)


# பனை தென்னைவள கைத்தொழில் அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட வேண்டும்

*பேராசிரியர் இராசதுரை தெரிவிப்பு*

(அலுவலக செய்தியாளர்)

பனை, தென்னைவள கைத்தொழில் அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட வேண்டும் என பேராசிரியர் இராசதுரை தெரிவித்துள்ளார்.

கடந்த 31ஆம் திகதி வடமாகாண பனை, தென்னைவள அகூநி.பேரிணையம் ஒழுங்கு செய்த பனை, தென்னைவள கூட்டுறவு நிறுவனங்களின் உற்பத்தி அபிவிருத்தியை மேம்படுத்தல் தொடர்பாக விரைவில் நடைபெறவுள்ள ஆய்வரங்குக்கான ஆலோசனைக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் வட-கிழக்கு மாகாணத்தில் தான் 90 வீதமான பனை மரங்கள் காணப்படுவதால் இவ்வளங்களின் பயனை முழுமை பெறச் செய்ய வேண்டும். இந்நோக்கிலேயே விரைவில் பனை தென்னைவள தொழில்நுட்ப சான்றிதழ் பயிற்சியை யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் ஆரம்பிக்கவுள்ளதெனச் சுட்டிக்காட்டியதுடன், விரைவில் நடைபெறவுள்ள ஆய்வரங்கின் முடிவுகளை செயல் வடிவம் கொடுக்கத்தக்கதான கொள்கை வகுக்க வேண்டும் எனவும் இத்துறையின் மேம்பாட்டை வலுவடையச் செய்ய தெற்கிலும், வெளிநாடுகளிலும் இருந்து தொழில்நுட்பம் தேவையான வேளைகளில் பெறமுடியும் எனவும் தெரிவித்தார். முதலில் இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி தொழில்நுட்ப அறிவையும் வளர்த்து தரமான உற்பத்திகள் மேற்கொள்ளப்படுமானால் அதற்கான சந்தை வாய்ப்பு உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் நிறைய உண்டு எனத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், முன்னாள் வடமாகாண (ப.தெ) கூ.அ. உதவி ஆணையாளர் தி.சபாரட்ணம், வட-கிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர் சி.கந்தசாமி, கூ.அ.உ. ஆணையாளர் (ப.பொ) யாழ்ப்பாணம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நிர்வாக உத்தியோகத்தர் அருள், சு.கணேசமூர்த்தி, கூ.அ.உ..ஆணையாளர் (ப.பொ) வன்னி, எ.சின்னத்தம்பி, பனை அபிவிருத்திச் சபை பொதுமுகாமையாளர் சோ.கோகுலதாசன் தென்னை அபி.சபை பிராந்திய முகாமையாளர் க.சிவச்சந்திரன் தால மூலவள நிலைய இணைப்பாளர் வி.ஜி.தங்கவேல் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்கள் தெரிவித்தனர். மேற்படி கலந்துரையாடல் கிளி.மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் செ.முரளி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ப.தெ.வ.அபி. கூ.நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து கருத்துக்கள் தெரிவித்தனர்.

இறுதியில் ஆய்வரங்குக்கான அறிக்கைகளை தயாரிக்கும் துறைசார் வல்லுனர்கள் இனங்காணப்பட்டு விடயங்களும் தெரிவு செய்யப்பட்டன. இவ் ஆய்வரங்கில் கிழக்கு மாகாண பல்கலைக்கழக துறைசார் அறிஞர்களும் வரவழைக்கப்படவுள்ளனர். இறுதியில் பேரிணையத்தின் பொது முகாமையாளர் கி.சிவனேசன் நன்றி தெரிவித்தார். (சோ)

## கசிப்புடன் கைது

(உடையார்கட்டு)

உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய கசிப்பு உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபட்டுவந்த நபர் ஒருவர் உடையார்கட்டு காவல் பணிமனையினரின் தீவிர முயற்சியுடன் கூடிய திடீர் நடவடிக்கையின் போது கசிப்பு பரலுடன் சிக்கினார். (19)

## மீண்டும் வைத்தியசேவை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கிய காலம தொடக்கம் வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்திய சாலையிலிருந்து வைத்தியர் ஒருவரும் சில ஊழியர்களும் வந்து இப்பிரதேசத்தில் உள்ள மக்களைப் பார்வையிட்டு மருந்து கொடுத்து வந்தனர். அத்துடன் தாய், சேய் கிளினிக்கும் இடம் பெற்று வந்தது. சென்ற வைகாசிமாதம் 1ஆம் திகதி தொடக்கம் வருவதை நிறுத்திவிட்டார்கள். இதனால் இப்பிரதேச மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டனர். அவர்கள் மீண்டும் 23ஆம் திகதி தொடக்கம் தமது சேவையினை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை மருதங்கேணி கிராம வைத்தியசாலை யின் கட்டிட வேலைகள் வேகமாக இடம் பெற்றுக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாய உள்ளது. இது மிக விரைவில் திறந்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (11)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
10
04
1927



உதிர்வு
05
07
2003

### சரவணமுத்து கண்மணி

*(ஏழாலை மத்தி, யாழ்)*

எமது இதயக் கோயிலை ஆராதனை
செய்ய மலர்ந்த மலரே!
அந்த மலர் உதிர்வு கண்டு கலங்கிய
விழிகளோடு காலமெல்லாம் பூஜை
செய்வோம்.

04.08.2003 அன்று ஏழாலையில் எமது அம்மாவின் அந்தியேட்டிக் கிரியை நடைபெறும். அதில் அனைவரும் கலந்து கொள்ளவும்.

தகவல்:-
ச.மகேந்திரம்,
தேராவில்.
விசுவமடு.

(3468)



## 7 ம் ஆண்டு நீங்காத நினைவில்

தாயின் மடியில்
24
05
1970



தாயக மண்ணில்
04
08
1996

### லெப்.அண்ணாத்துரை

கோவிந்தபிள்ளை-பத்மநாதன் /ரூபன்

மண்ணுக்காய் மரணித்த மாபெரும் தியாகியே!
எண்ணற்ற பெருமையுண்டு என்றெண்ணி
கண்ணுக்குள் இருந்த மணி(நீ) கண்ணை விட்டு
விண்ணுக்குள் சென்றாயோ.

கலவெட்டித்திடல்
புளியம்பொக்கணை

(3596)

என்றும் உன்
நினைவில்
குடும்பத்தினர்.



## 7ஆம் ஆண்டு நீங்காத நினைவில்...

தாயின் மடியில்
1977
-
03
-
24



தாயக மண்ணில்
1996
-
08
-
04

### லெப். ஐம்பொறி

(சடாட்சரம் அஷ்டாச்சரம் (அஷ்டா)
கெற்பேலி, மிருசுவில்

பரந்தனில் பாயும் புலியாய்
பகை கொண்டு பகை வென்ற
பாசமான ஐம்பொறியே – நீ
சோகமதை எமக்குவிட்டு
தூங்கச் சென்றதேனோ...

இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

சோலை இல-37
ஜெயபுரம்,
பூநகரி.

(3603)

என்றும் உன்நினைவில்
அப்பா, அம்மா,அக்கா,
தம்பிமார்.

# வடகொரிய அணுவாயுத சர்ச்சைக்கு நிபந்தனையுடனான பேச்சுக்கு அழைப்பு

(பியோங்யாங்)

**வடகொரியா சர்ச்சைக்குரிய அணுவாயுதத் திட்டம் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவது என்ற அதன் நிலைப்பாட்டில் மாற்றமில்லை எனத் தெரிவித்துள்ளது. அதே வேளை நிபந்தனையும் விதித்துள்ளது.**

ஆறுதரப்பினர் கலந்து கொள்ளும் பேச்சுவார்த்தைஎனும் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமுமில்லை என்று கூறியுள்ள வேளையில் இந்தப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளும் குழுவில் அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சர் ஜோன் வோல்சன் ஓர் அதிகாரியாகக் கலந்து கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறியுள்ளது.

வடகொரியாவின் தலைவர் பியோங் ஜாங்கில் ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்றார் அங்கு ஆயிரக் கணக்கானோர் சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள் இலட்சக் கணக்கானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றார்கள் என்று வோல் சன் கண்டித்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

வடகொரியாவும் அமெரிக்காவும் அணுவாயுதத் திட்டம் குறித்து 06 தரப்பினர் கலந்து கொள்ளும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள கடந்த வெள்ளிக்கிழமை இணக்கம் தெரிவித்திருந்தன.

சீனா, யப்பான், ரஷ்யா, தென்கொரியா, ஆகிய நாடுகளும் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவுள்ளன. வடகொரியா இரகசியமான முறையில் அணுவாயுததிட்டம் ஒன்றை முன்னெடுத்துச் செல்வதாக ஒப்புக் கொண்டதையடுத்து வாஷிங்டனுக்கும் பியோங்யாங்கிற்குமிடையே தகராறு மூண்டது.



பெய்ரூட் நகருக்கருகில் நேற்று முன்தினம் நடந்த குண்டு வெடிப்பில் சேதமான கார் ஒன்றை சோதனையிடும் லெபனானிய குண்டு கண்டு பிடிக்கும் நிபுனர் இதில் ஒருவர் பலியானார்.

# லைபீரிய சனாதிபதி சார்ள்ஸ் ரெயிலர் பதவியிலிருந்து விலகத் திகதி குறிப்பு!

(மொன்ரோவியா)

லைபீரியாவில் கிளர்ச்சி வாதிகளின் தீவிர தாக்குதலுக்கு மத்தியில் சனாதிபதி சார்ள்ஸ்ரெயிலர் 09 நாட்களுக்குள் அதிகாரத்தை துறந்து நாட்டிலிருந்து வெளியேறிவிடுவதாக உறுதியளித்துள்ளார்.

கிளர்ச்சி வாதிகளால் கடந்த 15 நாட்களாக தலைநகர் மொன்ரோவியா சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. அமைதிகாக்கும் படைகள் இன்று வந்துசேரவுள்ளமை தெரிந்ததே.

இம்மாதம் 11ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 11.59 மணியளவில்தான் பதவியிலிருந்து விலகப்போவதாக தெரிவித்துள்ள சனாதிபதி ரெயிலர் தனக்குப்பதிலாக அன்றைய தினம் புதிய சனாதிபதி ஒருவர் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவேண்டுமென, பதவியிலிருந்து விலகுமாறு சர்வதேச நெருக்கடிக்கு உள்ளாகிவரும் ரெயிலர் கூறியுள்ளார்.


இவர் தனது பதவியை ஒப்படைப்பதற்கு வசதியாக செனற்சபையும், பிரதிநிதிகள் சமையும் வியாழக்கிழமை கூடவுள்ளன.

## மரணவாயிலில் இடியமீன்

சவுதி அரேபியாவில் வைத்திய சாலையில் கடும் சுகயீனம் காரணமாக உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் உகண்டாவின் முன்னாள் சர்வாதிகாரி இடிஅமீன் இறக்கும் தறுவாயிலுள்ளதாக வைத்திய சாலை மருத்துவ அறிக்கை தெரிவித்துள்ளது.



கென்யா முஸ்லிம் போராளி இறக்க காரணமான் பொலிசாரின் திடீர் தாக்குதலைக் கண்டித்து கென்ய முஸ்லீம்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் அமெரிக்க கொடி எரிக்கப்படுகிறது.



அமெரிக்க வெள்ளைமாளிகையின் தோற்றம் இவ்வாறு காட்சியளிக்கிறது.



குவைத்தில் 1990ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின்போது நேச நாட்டுப்படைகளால் அழிக்கப்பட்ட ஆயுதங்களின் தொகுதி (கடந்த 2ஆம் திகதி 13வது ஆண்டு என்பது குறிப்பிடத்தக்கது.)

# இஸ்லாமிய தீவிரவாதிகளை துண்டித்தால் அமெரிக்கா கடும் விளைவை சந்திக்கநேரும்

## அல்- ஹைதா துணைத் தலைவர் அறிவிப்பு

அமெரிக்காவின் உலக வர்த்தக மையக் கட்டடத் தாக்குதலுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் அல்ஹைதா அமைப்பின் பின்லேடனுக்கு அடுத்த நிலையிலுள்ள தலைவரான ஜமன் அல் ஜவாகரியின் எச்சரிக்கையடங்கிய ஒலி நாடாவை அரபு நாட்டில் இயங்கி வரும் அல் அரேபிய செய்தி நிறுவனம் ஒலிபரப்பியுள்ளது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இஸ்லாமியத் தீவிரவாதிகளை அமெரிக்க அரசு கியூபா அருகிலுள்ள காஞ்சனா மோஸ் தீவில் சிறைவைத்துள்ளது.

த்விரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட இவர்கள் மீது விசாரணை நடாத்தப்பட்டு வரும் நிலையில் அமெரிக்காவின் இந்தப் போக்கை எதிர்த்து நேற்று அல்-அரேபிய தொலைக் காட்சியில் அல் ஜவாகரியின் பேச்சு ஒலிபரப்பாகியுள்ளது.

அமெரிக்க அரசின் போக்கை கடுமையாகச் சாடியுள்ள ஜவாகரி இஸ்லாமியத் தீவிரவாதிகளை தண்டித்தால் அதற்குரிய விலையை அமெரிக்கா கொடுக்கநேரிடும் என எச்சரித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்காவுக்கு எதிரான போராட்டம் இன்னும் சரியான முறையில் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

கியூபாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தீவிரவாதிகள் இராணுவ நீதி மன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு விசாரணை செய்யப்படுவார்கள் என்றும் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என்றும் அமெரிக்கா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெடிவிபத்தில் 45பேர் பலி!

பாகிஸ்தானின் வடமேற்கு கிராமம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 45பேர் கொல்லப்பட்டுள்ளனர். 60பேர் காயமடைந்துள்ளனர்.

டியாமீர் கிராமம் ஒன்றில் வீட்டில் வைக்கப்பட்டிருந்த வெடிமருந்து சாதனங்கள் நேற்று முன்தினமிரவு திடிரென தீப்பிடித்துக் கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. என பாகிஸ்தான் அரச தொலைக் காட்சி அறிவித்துள்ளது.

எவ்வகையான வெடிபொருட்கள் எதற்காக அந்த வீட்டில் வைக்கப்பட்டிருந்தன என்பது குறித்து விபரங்கள் தெரியவரவில்லை.

# தேர்தல் நடைமுறைகளை மாற்ற அரசு ஆலோசனை

(புதுடில்லி)

இந்திய மக்களவை மற்றும் மாநிலங்களின் தேர்தலை ஒரே நேரத்தில் நடத்தும் நடைமுறையை மீண்டும் கொண்டு வருவது குறித்து அரசு சிந்தித்து வருவதாக துணைப் பிரதமர் அத்வானி கூறியுள்ளார்.

தேர்தல் கால அட்டவணையை மாற்றியமைப்பதன் மூலமோ, அவசியம் எனில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவருவதன் மூலமோ இதனை நிறைவேற்றுவது குறித்து அரசு ஆலோசித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்வானியின் இந்த கருத்துக்கு காங்கிரஸ் கட்சி ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவையிலோ கூட்டணிக்கட்சிகளுடனோ கலந்து பேசாமலேயே அத்வானி இத்தகைய அறிவிப்புகளை வெளியிடுகின்றார் என்று காங்கிரஸ் தொடர்பாளர் ஜெயபால் ரெட்டி கூறியுள்ளார்.

# அருணாச்சலப் பிரதேசத்தில் புதிய அரசு பதவியேற்பு

(புதுடில்லி)

அருணாச்சலப்பிரதேசத்தில் முன்னாள் முதலமைச்சர் ஜிகாங் அபாங் தலைமையிலான புதிய அமைச்சரவை நேற்றுப் பதவியேற்றுள்ளது.

தலைநகர் இத்தா நகரில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்வில் முதலமைச்சராக பதவியேற்ற ஜிகாங் அபாங்கிற்கு மாநில ஆளுநர் வி.சி.பாண்டே பதவிப்பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

முன்னதாக 60 சட்டசபை உறுப்பினர்களில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 31 உறுப்பினர்கள் அக்கட்சியிலிருந்து விலகிமுன்னாள் முதலமைச்சர் ஜிகாங் அபாங் தலைமையில் சனநாயக முன்னணி அமைந்துள்ளதையடுத்து முகுத்முப்தி அரசு பெரும் பான்மையை இழந்துள்ளது. முதலமைச்சர் முப்தி அவையில் நம்பிக்கை வாக்குக் கோரும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானத்தின் மீது 08 மணிநேரம் நடந்த நீண்ட விவாதத்தின் பின்னர் குரல் வாக்கெடுப்பு மூலம் முப்தி அரசு தோல்வியடைந்தது.

# இப்பொழுது பிரிந்திருப்பவர்களை ஒன்று சேர்க்க

# சுயநிர்ணய உரிமை வழங்குதல் அவசியம்

இப்பொழுது பிரிந்து இருப்பவர்களை ஒன்று சேர்ப்பதற்கே சுயநிர்ணய ஆட்சி தேவை எனக் கூறுகிறோம். இந்த நிலை மேலும் தொடருமானால் தனி ஈழம் பிரிந்து போவதைத் தடுக்க முடியாது எனக் கூறுகிறார் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரம பாகு கருணாரத்ன "தினமின" சிங்கள நாளிதழுக்கு அவர் வழங்கிய பேட்டியின் ஒரு பகுதி கீழே தரப்படுகிறது.



**கேள்வி: வட-கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு ஏன் சுயநிர்ணய ஆட்சி வழங்க வேண்டும் என்பதில் தாங்கள் உறுதியாக இருக்கின்றீர்கள்?**

பதில்: 1974ஆம் ஆண்டு தமிழர்களுக்கு சுயநிர்ணய ஆட்சியே சிறந்ததென இடதுசாரிகளாகிய நாங்கள் தீர்மானத்தோம். இது ஓர் இனப்பிரச்சினை, இந்த இனப்பிரச்சினையை சுயநிர்ணய ஆட்சியின் மூலம் தீர்க்க வேண்டும். தங்களைத் தாங்களே ஆளும் உரிமை வேண்டும். அதாவது தமிழர்களைத் தமிழர்களே ஆள வேண்டும். இதுவே மாக்சியவாதிகளின் சிந்தனைகளாகும். இந்த நாட்டுப் பிரச்சினைகளுக்கு இதுவே சிறந்த மார்க்கமாகும்.

**கேள்வி: இலங்கை மக்களிடையே இனப்பிரச்சினைகள் உண்டு என்பதை நீங்கள் எந்த அடிப்படையில் கூறுகின்றீர்கள்?**

பதில்: இலங்கையில், சிங்கள, தமிழ், முஸ்லிம் என மூன்று இனங்கள் உள்ளன. இவர்களின் கலாச்சாரம், மொழி மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இதில் முக்கியத்துவம் பெறுகிறது. தமிழர்கள் போலவே முஸ்லிம்களும் தமிழ் மொழியை தமது தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். முஸ்லிம்களும் தமக்கு உரிமைகள் வேண்டும் என கூறுகின்றனர். இவைகளை பாராளுமன்ற சனநாயக மூலமாகத் தீர்ப்பது ஒரு கடினமான விடயமாகும். இதில் இனங்களை அதிகமாக பிரதிநிதித்துவப்படுத்தும் முறைகள் தேவைப்படுகின்றது. இக்காலப் பகுதியில் தான். தமிழர் கூட்டணி ஆரம்பமாகியது. இளைஞர்களின் இயக்கங்களும் ஆரம்பமாகியது. 1974ஆம் ஆண்டு தமிழ் இன எழுச்சியின் ஆரம்பமுதல் கட்டம். இதில் தமிழரசு கட்சியினரும், ஏனைய தமிழ் கட்சிகளும், ஒன்று சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்தனர். இதில் தமிழ் இனத்திற்காகப் போராட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

**கேள்வி: உறுதியான ஆட்சி ஒன்று ஏற்படுத்தும் வரை வட-கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகசபை அதிகாரங்கள் கொடுப்பது ஒரு ஈழம் கொடுப்பதற்கு சமமானதா? இது சம்பந்தமாக என்ன அபிப்பிராயத்தை கொண்டுள்ளீர்கள்?**

பதில்: இதில் இனவாதிகள் யுத்தத்தை ஆதரிப்பவர்கள் மற்றும் சனநாயகத்திற்கு மதிப்பளிப்பவர்கள் என இரண்டு பிரிவுகள் ஏற்படுத்தப்படவேண்டும். இந்த நாட்டில் இனவாதத்தை ஆதரிப்பவர்களும், யுத்தத்தை ஆதரிப்பவர்களும், இவர்கள் உதவாக்கரைகள், மாவட்ட சபை ஒன்று ஏற்படுத்தினால் அதுவும் ஈழம் கொடுப்பதற்கு சமம் என கோசமிட்டார்கள். அவர்கள் எந்த அதிகாரங்களும் கொடுக்க சம்மதிக்க மாட்டார்கள். அவர்களோடு கதைப்பதில் எந்தப் பிரயோசனமும் கிடையாது. ஜே.வி.பி.யும் சிஹல உறுமய கட்சியும் இந்த இனத்தை சேர்ந்தவர்களாவார்கள்., அந்தப் புத்தியற்றவர்கள் அரசியல் என்றால் என்னவென்று தெரியாதவர்கள். இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைப்பதற்கு அன்று தீர்மானித்திருந்தார்கள். 10 வருடகாலத்திற்கு விடுதலைப்புலிகளுக்கு ஆட்சியை கொடுக்கலாம் எனவும், அரசியல் யாப்பை மாற்றி அமைக்கும் வரை இடைக்கால நிர்வாக சபை ஒன்று அவசியம். இதில் ஏற்படுத்தப்படும் சமஷ்டி சுயநிர்ணய நிர்வாகத்தை ஏற்றுக் கொள்வதாக விடுதலைப் புலிகள் அன்று கூறினார்கள். இந்த யோசனைகளுக்கு இராணுவம் முட்டுக் கட்டையாக இருந்தது. மனித உரிமைகளை மதிக்கும் ஒவ்வொருவரும் சுயநிர்ணயத்தை ஆதரிக்க வேண்டும். அதற்கு மதிப்பளிக்க வேண்டும். தற்பொழுது ஏ-9 பாதை திறக்கப்பட்டு, அதில் நாங்கள் பிராயணம் செய்கிறோம். அந்தப் பாதையும் ஈழத்திற்கே சொந்தமானது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிறகும், நாங்கள் புலிகளின் அனுமதியோடு தான் செல்ல வேண்டி உள்ளது. இது எல்லோருக்கும் தெரியும்.

**கேள்வி: சுயநிர்ணய ஆட்சி அமைப்பை புலிகளுக்கு கொடுத் தால் சில வேளைகளில் புலிகள் வேறு ஆட்சியினை ஏற்படுத்து வார்களா?**

பதில்: இப்பொழுது பிரிந்து இருப்பவர்கள் சேர்வதற்கே இந்த சுயநிர்ணயஆட்சி தேவை என்பதை எடுத்து கூறுகிறோம். இந்த நிலை மேலும் தொடருமானால் தனி ஈழம் பிரிந்து போவதைத் தடுக்க முடியாது.

வட-கிழக்கிற்கு சுயநிர்ணய ஆட்சி கொடுக்கப்பட்டால், தமிழ் சிறுபான்மை இன மக்கள் மிக மகிழ்ச்சி அடைவார்கள். ஆனால் பிரிந்து தமிழர்கள் போவார்கள் என எவரும் சொல்ல முடியாது. அக்கிரமங்கள் அதிகம் ஏற்பட்டால் மக்கள் தாங்கமாட்டார்கள். நிச்சயம் பிரிந்து செல்வார்கள். இதை எவராலும் தடுக்க முடியாது.

**கேள்வி: வட-கிழக்கிற்கு சுயநிர்ணய ஆட்சி கொடுத்து ஒரு சமாதான இலங்கையை ஏற்படுத்த முடியுமா? இல்லையேல் நாட்டில் எல்லைப் பிரச்சினைகள் ஏற்பட்டு மேலும் பிரச்சினைகள் அதிகரிக்குமா?**

பதில்: சுயநிர்ணய ஆட்சி கொடுப்பதில் நாட்டில் பெரும் பிரச்சினைகள் தீரும். நாட்டில் எல்லைப் பிரச்சினைகள் ஏற்படும். இது பெரிய அரசியல் பிரச்சினையாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் பொருளாதார பிரச்சினைகள் மற்றும் பொதுப் பிரச்சினைகள். இதில் தீரும் என நம்ப முடியாது. இவைகள் எல்லாம் தேசிய பிரச்சினைகள் அல்ல.

**கேள்வி: தற்போதைய அரசு மேற் கொள்ளும் சமாதான திட்டத் தைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

பதில்: தற்பொழுது அரசு நல்லதொரு முடிவை மேற்கொண்டுள்ளது. ஆனாலும் இதில் பல அரசியல் திட்டங்கள் உள்ளடக்கப்பட வேண்டி உள்ளது. முதலாவது தென் பகுதியில் சமாதானத்தை விரும்பும் மக்களை சமாதான சபை ஒன்று ஏற்படுத்தி அவர்களை

மொழியாக்கம்: **சக்திவேல்**

முழுமையாகப் பங்கு கொள்ள வைத்தல் வேண்டும். இவர்களோடு பொதுசன ஐக்கிய முன்னணியில் சமாதானத்தை விரும்பும் ஏனையோர்களையும் சேர்த்துக் கொள்ளுதல் அவசியம். இல்லை யேல் ஜே.வி.பி. போன்ற இனவாத கட்சிகள் இவர்களுடன் கூட்டுச் சேர்வார்கள். பொதுசன ஐக்கிய முன்னணியின் உதவி இல்லாமல் ஜே.வி.பி.யினருக்கு தனித்து இயங்க முடியாது. இப்படிப்பட்ட சந்தர்ப்பவாதிகளோடு அரசு எக்காரணம் கொண்டும் கூட்டுச் சேர்வது நல்லதல்ல. அரசு வேலை செய்யும் தொழிலாளர்களோடு ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும். அவர்களோடு முரண்படுவதை தவிர்த்துக் கொள்ளுதல் மிக அவசியமாகும். அதேபோல் நாட்டில் பொலிசார் சட்டங்களை நேர்மையுடன் அமுல்படுத்த வேண்டும். நாட்டில் வாழும் சகலருக்கும் பாதுகாப்பு அளிப்பது பொலிசாரின் கடமையாகும். நல்ல அமைச்சர்கள் இருக்கின்றபடியால் பிரதமருக்கு மேற்கூறிய காரணங்கள் அமுல்படுத்துவதில் சிரமம் ஏற்படாது. நாட்டை மீண்டும் படுகுழியில் தள்ளக் கூடாது.

**கேள்வி: தற்பொழுது இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான பேச்சுவார்த்தைகள் எதிர்காலத்தில் அதை நடைமுறைப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள் ளல் வேண்டும்?**

பதில்: அரசு எல்லாவிடயங்களையும் அமுல்படுத்தும் என விடுதலைப்புலிகள் நம்பவில்லை. அமெரிக்கா எவ்வளவு நெருக்குதலை அரசுக்கு கொடுத்தாலும் மக்கள் இவர்களின் நெருக்குதலை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அரசியல் யாப்பை மாற்றி அமைப்பது கடினமான விடயம் என விடுதலைப்புலிகளுக்கு தெரியும். இவர்களுக்கு அரசைப்பற்றி தற்பொழுது நம்பிக்கை இல்லை. அதனால் தான் என்ன எங்களுக்கு கொடுக்கப் போகிறீர்கள். ஒரு தெளிவான முடிவை அரசிடம் கேட்கின்றனர். ஆனபடியால் அரசு எந்த யோசனைகளை அமுல்படுத்த போகிறதென்பதை கட்டாயமாக விடுதலைப்புலிகளுக்கு கூறவேண்டும். இதிலிருந்து அரசு நழுவ முடியாது.

இப்பொழுது நாங்கள் என்ன செய்ய வேண்டும். தமிழ் மக்கள் எதை விரும்புகின்றனர். அதிகமான தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை நாங்கள் கொடுக்க வேண்டும். விடுதலைப்புலிகள் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்பதைப் புள்ளி விபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

**கேள்வி: தற்பொழுது எதிர்க்கட்சியினரும் ஜே.வி.பி. யினரும், தெற்கில் இனவாதத்தை கிளப்பி மக்களை அவர்கள் பக்கம் இழுப்பதில் ஈடுபட்டு வருகின்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும், இணைவது நாட்டின் இனவாதத்தை தூண்டி மக்களை திசை திரும்பும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இச்செய்கை சமாதானத்திற்கு பெரிய பின்னடைவை உண்டு பண்ணும்.**

பதில்: முதலில் அரசு நாட்டின் இனவாதத்தை முற்றாக ஒழிக்க வேண்டும். பொதுசன ஐக்கிய முன்னணியின் மகிந்த ராஜபக்ஷ அவர்களும் சமாதானத்தின் பக்கமே உள்ளார். சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்து கொண்டு நாட்டின் இனவாதத்தை ஒழிக்கவேண்டும். இல்லையேல் பாரிய பின் விளைவுகள் ஏற்படும். ஒரு சீரான வழியை ஏற்படுத்தி உள்ளோம். இப்பொழுது அநேக மக்கள் எமது கொள்கைகள் சரி என ஏற்றுக் கொண்டுள்ளனர். இனவாதம் ஒன்று இந்த நாட்டில் ஏற்படுமானால் அதற்கு எதிராக எதிர்காலத்தில் அணிதிரண்டு இந்த நாட்டின் இனவாதிகளுக்கு முடிவு கட்டி பலம் வாய்ந்த ஒரு முற்போக்கு இடதுசாரி கட்சியை ஏற்படுத்துவோம்.

**கேள்வி: சிலவேளை சமாதானப் பேச்சுவார்த் தைகள் தடைப்பட்டு மீண்டும் நாட்டில் யுத்தம் ஏற்பட்டால் என்ன நடக்கும்.**

பதில்: நாட்டின் கடைசி அத்தியாயம் முடியும். அதாவது நாட்டில் ஒன்றும் இருக்காது. எல்லாம் நாசமாகிவிடும்.

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பெற்றோல் அலவன்ஸ் அதிகரிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பெற்றோல் அலவன்சை அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எம்.பி.க்களின் பெற்றோல் அலவன்ஸ் 7500-22500 ரூபா வரையில் அதிகரிக்கப்படவுள்ளதாக பிரதமரின் கீழ் இயங்கும் கொள்கை திட்டமிடல் அமைப்பு அமைச்சரவைக்கு நகல் பத்திரிகை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

ஆனால், எதிர்காலத்தில் எம்.பி.க்களின் தொகுதி மாவட்ட தூரக் கணிப்பின் அடிப்படையில் அலவன்ஸ் வழங்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மன்னார், அம்பாறை, யாழ்ப்பாணம்- 22500 ரூபா, பொலநறுவை, பதுளை, அம்பாந்தோட்டை, வவுனியா, மொனறாகலை, அநுராதபுரம், திருகோணமலை, கிளிநொச்சி - 20,000 ரூபா, மாத்தளை, புத்தளம், மாத்தறை, நுவரெலியா-17500 ரூபா, கேகாலை, குருநாகல், இரத்தினபுரி, காலி, கண்டி 15,000 ரூபா, கம்பஹா, களுத்துறை 12,500 ரூபா, கொழும்பு 10,000 ரூபா.

## இலஞ்ச ஊழல் ஆணையாளர் இன்மையால் 900 முறைப்பாடுகள் தேக்கமடைவு!

(கொழும்பு)

சிறிலங்காவில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படாமையால் அங்கு 900 முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாது தேங்கியுள்ளதாக தெரிய வருகின்றது.

ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மூன்று பேரடங்கிய குழுவினரால் மேற்படி முறைப்பாடுகள் விசாரிக்கப்பட வேண்டும். 2003ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி ஆணையாளர் அபேவீர காலமானதையடுத்து ஏற்பட்ட வெற்றிடம் இதுவரை நிரப்பப்படாததால் இப்பிரச்சினை தோன்றியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது

## சுவிஸில் வாழும் கவிஞர் சுயேனின் கவிதை நூல் யாழ். இல் வெளியீடு

வல்வெட்டித்துறையில் இருந்து இடம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசித்துவரும் கவிஞரான சுயேனினால் எழுதப்பட்ட கவிதை நூல் தொகுதி ஒன்று இன்று வெளியிடப்படவுள்ளது. வல்வெட்டித்துறையிலுள்ள சிதம்பராக் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் நான்கு மணிக்கு இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் நூலிற்கான வெளியீட்டுரையை விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தவுள்ளார். சிதம்பராக் கல்லூரி அதிபர் அ.அரியரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் சிறப்புரையை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நிகழ்த்தவுள்ளார். நூலிற்கான ஆய்வுரையை எழுத்தாளர் செம்பியன் செல்வன், கலாநிதி சிவலிங்கராசா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். இடம்பெயர்ந்து சுவிஸ்நாட்டில் வசித்துவரும் இவரது கவிதைத் தொகுப்பை தமிழீழ கலை பண்பாட்டுக்கழகத்தினர் அவரது சொந்த இடத்திலேயே வெளியிட்டு வைக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

## ரயில்வே திணைக்களத்தை அரசு தனியார் மயமாக்காது

(கொழும்பு)

ரயில்வே திணைக்களத்தை அரசு எவ்வேளையிலும் தனியார் மயப்படுத்தமாட்டாதென போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பன கூறியுள்ளார்.

இது சம்பந்தமாக சிலர் பரப்பி வருகின்ற வதந்திகளை நம்பி தவறான வழியில் செல்ல வேண்டாமென ரயில்வே திணைக்களத்திலுள்ள தொழிற்சங்கங்களிடம் அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ரயில்வே தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

# சட்டவிரோத நடவடிக்கைகளை ஒடுக்க பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் உறுதி!

(கொழும்பு)

**பாகிஸ்தானிலிருந்து சிறிலங்கா ஊடாக மேற்கொள்ளப்படும் சட்ட விரோத நடவடிக்கைகளான ஆட்கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் என்பவற்றைக் கட்டுப்படுத்த உரிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சயிட் பைசால் கயாட் உறுதி கூறியுள்ளார்.**

சட்டவிரோத ஆட்கடத்தல், போதைப் பொருள் கடத்தல் என்பவற்றைத் தடுப்பது தொடர்பாகப் பேச்சுவார்த்தைநடாத்த பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சிறிலங்கா வந்திருந்தார். கடந்த 30ஆம் திகதி தொடக்கம் 03 நாட்கள் விஜயமாக சிறிலங்காவந்த இவர் சிறிலங்கா உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவைச் சந்தித்துப் பேசினார்.

சட்டவிரோதமாக பாகிஸ்தானிலிருந்து ஆட்களை சிறிலங்காவிற்கு அழைத்து வந்து, பின்னர் சிறிலங்காவிலிருந்து இத்தாலிக்கு அவர்கள் அனுப்புவதற்கு ஆயத்தமான நிலையில் இதுவரையில் 360 பாகிஸ்தானியர்கள் கைது செய்யப்பட்டமை குறித்து விசேடமாக ஆராயப்பட்டது.

எதிர்காலத்தில் இவ்வாறு இத்தாலி அனுப்புவதற்கு வேறு நோக்கங்களுக்காக சட்டவிரோதமாகபாகிஸ்தானில் இருந்து சிறிலங்காவிற்கு அழைத்து வருவோரைத் தடுத்து நிறுத்துவதில் பாகிஸ்தான் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று உறுதியளிக்கப்பட்டிருக்கின்றது.

அடுத்து போதைப்பொருள் கடத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

அதனால், இவ்விடயத்தில் இரு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயற்பட்டு இவ்வாறான சட்ட விரோத நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

## உபகரணங்கள் வழங்கல்

ரியாத்தில் வதியும் இலங்கையா களின் கழகம் யாழ். மருத்துவமனைக்கு 8 இலட்சம் ரூபா பெறுமதியானமருத்துவஉபகரணங்களை (பல் சொக்ஸி மீட்டர்) வழங்கியுள்ளது. சத்திர சிகிச்சையின்போது தேவைப்படும் மேற்படி உபகரணங்கள் யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு மிக அவசியமானதாகவுள்ளதென யாழ். வைத்தியசாலை திட்டத்தின் பொருளாளர் வைத்தியர் பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.



பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சயிட் பைசால் கயாட்டும் சிறிலங்கா உள்துறை அமைச்சர்ஜோன் அமரதுங்கவும் சட்டவிரோத கடல் பயணங்கள் அண்மைக் காலமாக நடைபெறுவது பற்றி பேச்சு நடத்துகின்றனர்.

# பொதுசன ஐக்கிய முன்னணி நிறைவேற்றுக்குழு சனாதிபதி தலைமையில் இன்று கூடுகிறது!

## அரசின் யோசனைகள் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதற்கு தலைமை தாங்குகின்றார்.

இந்தக் கூட்டத்தில் சிறிலங்கா அரசு கூறியுள்ள சில யோசனைகள்தொடர்பாகமுக்கியமாக ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. அரசு யோசனை தெரிவித்துள்ள பாராளுமன்ற மேற்பார்வை குழுக்களின் தலைமைப் பதவிகளை ஏற்றுக் கொள்வதா? இல்லையா? என்பது குறித்து நிறை வேற்றுக்குழு இக்கூட்டத்தில் இறுதி முடிவொன்றை எடுக்கவுள்ளது. தேர்தல் முறைகளில் மாற்றத்தை கொண்டு வருவது பற்றி ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றக் குழுவின் தலைமைப் பதவிக்கு தினேஸ் குணவர்த்தன தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாகவும் இக்கூட்டத்தில் மற்றுமோர் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, இடைக்கால யோசனைகள் தொடர்பான விடயங்கள் செயற்குழு கூட்டத்தில் ஆராயப்படுமா என்பது குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

## -உடத்தலவின்னவில் பலியானோரின்-

# குடும்பங்களுக்கு நட்டஈடு பொ.ஐ.மு.வினர் கண்டனம்

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலையில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு மட்டும் நட்டஈடு வழங்குவது பாரபட்சமான நடைமுறையென பொ.ஐ.முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா குற்றம் சாட்டியுள்ளார். இந் நடவடிக்கை மூலம் ஏனைய இடங்களில் இடம்பெற்ற வன்முறைகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களை அரசு புறக் கணித்திருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் சம்மேளனம் இது தொடர்பாகப் பிரதமருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும், இதன்படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

# அமைச்சர் மிலிந்தமொறகொட, ஒஸ்ரின் வவுனியாப் பகுதிக்கு விஜயம்

## படையதிகாரிகளுடன் சந்திப்பு

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்தமொறகொட மற்றும் படைத்துறை அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பர்னாண்டோ ஆகியோர் நேற்று முன்தினம் வவுனியாவிற்கு விஜயம் செய்துள்ளனர்.

வவுனியாவில் இவர்கள் படையதிகாரிகள் மற்றும் பொது அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். வவுனியாவில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துதல் மற்றும் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் தொடர்பாக இச் சந்திப்பின் போது ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இருவரும் வவுனியா மாவட்டப் படை உயர் அதிகாரிகளுடன் சுமார் இரு மணித்தியாலங்களுக்கு மேல் கலந்துரையாடியுள்ளதாகத் தெரியவருகிறது.

# வனவளப் பாதுகாப்புப் பிரிவின் மாவட்ட செயலகம் திறப்பு

30-07-2003 (புதன்) நண்பகல் 12.00 மணிக்கு தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவின் வவுனியா மாவட்ட செயலகத் திறப்புவிழா நிகழ்வுகள்-தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவின் வவுனியா மாவட்ட பொறுப்பாளர் ரமேஸ் தலைமையில் கடந்த புதனன்று நடைபெற்றது. இந்நிகழ்விற்கான மங்கல விளக்கினை வவுனியா வடக்கு முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர், கனகராயன்குளம் கிராம அலுவலர் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியினை வவுனியா- வடக்கு அரசியல்துறை பிரதேசப் பொறுப்பாளர் திலீப் ஏற்றிவைத்தார். மாவட்ட செயலக பெயர்ப்பலகையினை வவுனியா வடக்கு கோட் டக்கல்விப் பணிப்பாளர் இந்திரராசு திரை நீக்கம் செய்து வைத்தார். செயலக மண்டபத்தினை வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் திருஞான சம்பந்தமூர்த்தி நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் நடைபெற்றன.

# இரணைமடுவில் இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து!

## மூவர் சிறு காயங்களுக்குள்ளாகினர்

கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, பிரதான வீதியூடாக கிளை வீதியொன்றிற்குள் திரும்பிய உழவு இயந்திரமும், கிளை வீதியிலிருந்து பிரதானவீதி நோக்கி வந்த சிறிய கன்ரர்க வாகனமும் இரு வீதிகளும் சந்திக் கின்ற பகுதியில் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. இதனால், கன்ரர் வாகனம் பலத்த சேதமடைந்ததுடன் அதிலிருந்த மூவர் சிறுகாயங்களுடன் தப்பிக் கொண்டனர். இச்சம்ப வத்தையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த காவல் துறையினர் விசாரணை நடத்தினர்.

# ஆழியவளை திலீபன் மருத்துவமனையில் ஜூலையில் 2125 நோயாளர் சிகிச்சை

வடமராட்சி கிழக்கு ஆழியவளை தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் கடந்த 7ஆம் மாதம் 2125 நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதில் வைரஸ் காச்சலுக்கு 651 பேரும் மற்றும் மலேரியா-149, வயாற்றோட்டம் - 58, சுவாசவழித்தொற்று - 247, உயர் குருதி அமுக்கம், பாம்புக் கடி - 02, தொய்வு - 60 ஏனைய நோய்கள் - 948 நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர். ஆழியவளை தியாக தீபம் திலீபன் மருத்துவமனையினரால் மருதங்கேணியில் நடாத்தப்பட்டு வரும் முதலுதவி சிகிச்சை நிலையத்தில் 422பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களால் கேவில் பகுதியில் நடாத்தப்பட்டுவரும் முதலுவிச் சிகிச்சை நிலையத்தில் 268 நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர் என ஆழியவளை திலீபன் மருத்துவமனை பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

# வற்றாப்பளை வலயத்தில் வீரமுரசு வார அரங்கு நிகழ்வு

சமகால அரசியல் நிலைமைகளை தெளிவுபடுத்தும் கலை நிகழ்வுகள் கருத்துரைகள் அடங்கிய வீரமுரசு மாத அரங்கு நிகழ்வு கடந்த 28ஆம் திகதி முள்ளியவளை வற்றாப்பளை வலயத்தில் வற்றாப்பளை மகா வித்தியாலய விளையாட்டுத் திடலில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் இரவு 7.30 மணிக்கு ஆரம்பமானது.

முள்ளியவளைப்பிரதேச அரசியல் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் ஓய்வுபெற்ற அதிபர் மு.குகதாசன் தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வின் ஆரம்பநிகழ்வாகபொதுச் சுடரினை வைத்தியர் தேவரட்ணம் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து நிகழ்வின் தலைவரின் தலைமையுரை இடம்பெற்று சமகால கலை நிகழ்வு கள் ஆரம்பமானது.

கலை நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக கவிதை,இசையும் அசைவும், கொள்கை முன்னெடுப்பு பிரிவைச் சேர்ந்த செல்வம்மாமாவின் ஒழுங்குபடுத்தலில் பாடுவோர் பாடலாம் நிகழ்வு, புதுவை அன்பனின் நெறியாள்கையில் உருவான "கரைதேடும் ஓடங்கள்" என்ற நாடகம் என்பன இடம்பெற்றன. சமகால அரசியல் கருத்துரையினை வற்றாப்பளை மகா வித்தியாலய அதிபர் ரங்கநாதன், முல்லை மாவட்ட அரசியலதுறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் நிகழ்த்தினர். (ஆ)

# செயலாளராக நியமனம்

சனாதிபதியின் செயலாளராக டபிள்யூ.ஜெ.எஸ். கருணாரட்ண சனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். சனாதி பதியின் செயலாளர் பாலபட்டபெந்தி கடந்த மூன்று மாதங்களுக்கு முன் னர் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து இவர் பதில் செயலாளராக கடமை யாற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# போரினால் பாதிப்புற்ற சிறுவர்களுக்கு இடைத் தங்கல் முகாம் அமைக்க ஏற்பாடு

போரினால் பாதிப்புக்குள்ளான சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் விதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயித்தியமலையில் இடைத் தங்கல் முகாம் அமைப்புக்கான அடிக்கல் நடும் விழா எதிர்வரும் 06ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம் பெறவுள்ளது.

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள சிறுவர் இடைத் தங்கல் முகாமின் அடிக்கல் நாட்டும் விழாவில் இலங்கைக்கான யுனிசெவ் பிரதிநிதி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கே.பி. றெஜி, விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத் தளபதிகள், மாவட்ட அரச அதிபர் இ. மோனகுருசாமி உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளதாக மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் கு.தேவராசா தெரிவித்தார்.

# முல்லை. மாவட்டத்தில் கரைதேடும் ஓடங்கள்

சமகால அரசியல் நிலையைத் தெளிவுபடுத்தும் புதுவை அன்பனின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட கரைதேடும் ஓடங்கள் எனும் தெருவெளி நாடகம் முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேசம் பிரதேசமாக ஆங்காங்கு நடைபெற்று வருகின்றது.

கரைதேடும் ஓடங்கள் நாடகத்தினை பெருமளவான மக்கள்பார்த்து வருகின்றனர். இத்தெருவெளி நாடகத்தின்போது தற்கால அரசியல் கருத்துரையினை கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் செல்வம் மாமா வழங்கி வருகிறார். (ஆ)

## அழகியல் கண்காட்சி

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மண்டபத்தில் இன்று திங் கட்கிழமை அழகியற் கண்காட்சி இடம் பெறவுள்ளது.

நுண்கலைக்கல்லூரியின் அழ கியற் பிரிவு மாணவர்களால் இந்தக் கண்காட்சி ஒழுங்கு படுத்தப்பட்டுள் ளது. காலை 9.30 மணியளவில் கண்காட்சி ஆரம்பமாகவுள்ளதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக் கின்றனர் (26)

## 'விழி' இதழ் வெளிவந்தது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் மாத வெளியீடான மருத்துவ இதழ் 'விழி' இதழ் 35 வெளிவந்துள்ளது.

ருபெல்லா கனவைக் கலைக்கும் கொடிய அரக்கன் என்னும் தலைப் புச் செய்தியுடன், காக்கை வலிப்பு நோய் பற்றி பயப்படவேண்டிய தில்லை என்னும் ஆசிரியர் குறிப்பு டனும் மற்றும் நெருங்கி வரும் நெருப்புக்காய்ச்சல், பொடுகு பற்றித் தெரிந்து கொள்வோம், மகப்பேற்று இன்மைக்கான காரணங்கள் மேலும் பல சுகாதாரச் செய்திகளைத் தாங்கி புத்தக வடிவில் 'விழி' மருத் துவ இதழ் 35 வெளி வந்துள்ளது. (சோ)

## மாணவருக்கு சீருடையில்லை

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் உயர்தர கல்வி கற்கும் மாணவர்க ளுக்கு சீருடைக்கான துணி வழங் கப்படவில்லை என பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக பட்டிப்பளை பிரதேச செயலாளர் சி.அமலநாதனின் கவனத்திற்கும் கொண்டுவரப் பட்டுள்ளது. கடந்த சனவரி மாதம் வழங்கவேண்டிய இந்தச் சீருடைத் துணி இதுவரை வழங்கப்படா மைக்கு மட்டக்களப்பு சலுசல விற் பனை நிலையத்தினரின் அசமந்தப் போக்கே காரணம் எனப் பிரதேச செயலாளர் தெரிவித் தார்.

# பணிநிலை வேண்டுகை

மனிதவள மேம்பாட்டுப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. ஆர்வமுடையோர் தங்களது தன்வரலாறு அடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 10.08.2003ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

## பணிநிலைகள்

| | | |
|---|---|---|
| 01. ஆளுகை மேலாளர் | 02. கணக்காய்வாளர் | 03. கணக்குப்பதிவாளர் |
| 04. காசாளர் | 05. களஞ்சியக்காப்பாளர் | 06. மேற்பார்வையாளர் |
| 07. எழுதுநர் | 08.பாதுகாப்புப் பணியாளர் | 09. சிற்றூழியர் |

## கல்வித்தகைமை

**பணிநிலை 1, பணிநிலை 2**

ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருத்தமான பல்கலைக்கழகப்பட்டப்படிப்பு அல்லது உயர்தேசிய டிப்ளோமா அல்லது க.பொ.த(உ/த) உடன் ஐந்தாண்டிற்குக்குறையாத துறைசார் பட்டறிவு.

**பணிநிலை 3 தொடக்கம் 7 வரை**

க.பொ.த.(உ/த) அல்லது க.பொ.த(சா/த) உடன் மூன்றாண்டிற்கு குறையாத தொழில்சார் பட்டறிவு.

**பணிநிலை 8, பணிநிலை 9**

க.பொ.த(சா/த) அல்லது ஓராண்டிற்கு குறையாத தொழில்சார் பட்டறிவு.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
வருவாய்ப்பகுதிச்செயலகம்,
கிளிநொச்சி.

நேர்முகத்தேர்வு
11.08.2003 காலை 9.00மணிக்கு நடைபெறும்

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:
வருவாய்ப்பகுதிச்செயலகம்,
கிளிநொச்சி.

குறிப்பு:
01. நேர்முகத்தேர்வுக்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது.

ஆளுகை,
மனிதவளமேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை. (சீ-8448)




இலங்கையின் முதல்தர கூரைத்தகடு
ரயினோ
இன்று கூரைத்தகடு விற்பனையில்
யாழ்,வன்னியெங்கும் முன்னணியில் –
40 வருட மேன்மையான சேவை

ரயினோ என்று கேளுங்கள்

சிறந்த தெரிவு நீடித்துழைக்கும்
நம்பகத்தன்மை–தரம் என்றும் நிரந்தரம்
ரயினோ என்று கேளுங்கள்

உங்கள் தேவைக்கு வன்னியெங்கும் உள்ள
இளவேனில் வாணிபங்களை நாடுங்கள்
வியாபாரிகளுக்கும்
ஒப்பந்தகாரர்களுக்கும்
விசேட விலைக்கழிவு உண்டு.
மேலதிக தொடர்புகளுக்கு

RHINO
(சீ - 8317)

முகவராண்மை
இளவேனில் வாணிபம்
யாழ்சாலை, தொலைபேசி :- 070 - 213092, கிளிநொச்சி.

## சிந்தனைக்கு



சமூகநீதி சரிவரப் பேணப்பட்டால் தான் சமுதாயம் ஓர் உன்னத நிலைக்கு வரும்.

தமிழீழத்தேசியத் தலைவர்


ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 04-08-2003


## மன்னிப்புக் கோருவது தவிர்க்க இயலாது

கடந்த காலங்களில் சிறுபான்மையினருக்கு அரசால் தீங்கிழைக்கப்பட்டது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டிய தேவை, அவசியம் ஏற்பட்டுள்ளது என்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனின் கூற்றுக்கள் என்றோ ஒரு நாள் இலங்கைத்தீவில் சிறுபான்மையினருக்குக் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குச் சிறிலங்கா அரசு மன்னிப்புக் கோரவேண்டிவரும் என்பதைக் கட்டியம்கூறும் ஒன்றாகவே கொள்ளத்தக்கதாகும்.

சிறுபான்மையினருக்கு எதிராகச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் தீங்கிழைத்தார்கள் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு. சிறுபான்மையினரை ஒடுக்குவதற்காக சட்டவாட்சியையே சிங்கள ஆட்சியாளர்கள் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டதையும், அரச படைகளையும், குண்டர்களையும் அப்பாவி மக்கள் மீது ஏவியதையும் நிரூபணம் செய்வதென்பது கடினமான காரியமல்ல.

ஆனால், சிறிலங்கா ஆட்சியாளர்கள் எவருமே தாம் மேற்கொண்ட சிறுபான்மை இனத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு என்றோ ஒரு நாள் தாம் பொறுப்பேற்க வேண்டி இருக்கும் என எண்ணியதும் இல்லை, சிறுபான்மை இனங்கள் மீதான தமது நடவடிக்கை மிலேச்சத்தனமானது, காட்டுமிராண்டித்தனமானது என அவர்கள் வெட்கப்பட்டதும் இல்லை.

ஆனால், தற்போதைய சூழ்நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. கடந்த காலத்தில் சிறுபான்மை இனத்தவர்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட மிலேச்சத்தனமான நடவடிக்கைகளினால் நாடு இன்று மீளமுடியாத நெருக்கடிக்குள் சிக்கிக்கொள்ள வேண்டியதாகியுள்ளது. இதன் காரணமாக இன்று சிறிலங்கா ஆட்சியாளர்கள் கடந்த காலச் சிந்தனைப் போக்கை மாற்றிக் கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதன்விளைவே பிரட்மன் வீரக்கோன் போன்ற அரசியல் சார்ந்த அதிகாரிகள் கடந்த காலத்தில் தவறு இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதாகியுள்ளது. ஆயினும், பிரட்மன் வீரக்கோன்கூட இன்னமும் அதற்கு மன்னிப்புக் கோரவில்லையாயினும் நடந்தவை தவறு என ஒப்புக்கொள்ளும் வகையில் இதனை முன்னேற்றம் என்றே கொள்ளலாம்.

ஆனால், ஆட்சியாளர்கள் இத்தவறுகள் குறித்து கண்டுகொண்டதாகவில்லை. பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதென்பது 'சனநாயகத்தின் பண்பு' என்பது போன்றே நடந்துகொண்டனர். ஆனால், நாட்டில் வளர்ந்து வந்த நெருக்கடி அவர்களையும் விட்டுவைத்ததாக இல்லை.

இதன் காரணமாகவே காலத்திற்குக் காலம் மாறிமாறி ஆட்சிக்கு வருபவர்கள் இனப்பிரச்சினை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முன்னைய அரசாங்கத்தையே குறைகூறுகின்றனர். இவ்வாறு முன்னைய அரசாங்கங்கள் மீது குறை கூறுவது தவறு என்று இங்கு கூறவில்லையாயினும் அனைத்துத் தவறுக்கும் முன்னைய அரசாங்கம் மீது குறை கூறுதல் பொருத்தப்பாடான தொன்றல்ல.

எடுத்துக்காட்டாக, யுத்தத்தினால் நாடு பெரும் இன்னல்களுக்கு முகம்கொடுக்கின்றது என்று தெரிந்திருப்பது மட்டுமல்ல, அதனைத் தடுத்து நிறுத்தப்போவதாகக் கூறிப் பதவிக்குவந்த ஆட்சியாளர்கள் கூட பின்னர் அதேவழியையே தொடர்ந்தனர். சனாதிபதி சந்திரிகா இதற்குச் சரியான தொரு முன்னுதாரணமாகும். ஏனெனில், அரசியலைவிட யுத்தத்தினால் அவர்களுக்குப் பல்வேறு அனுகூலங்கள் உண்டு.

இருப்பினும், தற்பொழுது ஆட்சிக்கு வருபவர்கள் கடந்த கால அரசாங்கங்கள் சிறுபான்மையினருக்கு இழைத்த துன்பங்களுக்குத் தாம் பொறுப்பேற்கத் தயாராக இல்லாது போனாலும்– கடந்த காலத்தில் சிறுபான்மையினருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதைக் கூறத் தொடங்கிவிட்டனர். ஆனால், கடந்தகால ஆட்சியில் தமது பங்குகளையும், பாத்திரங்களையும் வெளிக்காட்டத் தயாராக இருப்பதாக இல்லை.

ஆனால், என்றோ ஒரு நாள் சிறுபான்மை இனத்தவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குச் சிங்கள ஆட்சியாளர்கள் அனைவரும் மன்னிப்புக் கோர வேண்டியதொரு நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். அவ்வேளையில், எச்சிங்களத் தலைவர்களும் இதனைப் புறந்தள்ளிவிட முடியாததாகவே அது இருக்கும். அத்தகையதொரு சந்தர்ப்பம் வரும்வேளையில் இதன் மூலம் நாட்டிற்கு அவர்கள் இழைத்த துரோகமும் உணரப்படும்.

### அமைச்சர் மகிந்த விஜய சேகரவால்

# ஊடகவியலாளர் மீது விடுக்கப்பட்ட கொலைப் பயமுறுத்தலை விசாரிக்கக்கோரல்

(கொழும்பு)

சிறிலங்காவின் மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த விஜயசேகர அண்மையில் மேலும் பல அமைச்சர்கள முன்னிலையில் வைத்து ஊடகவியலாளர் ஒருவரைச சுட்டுக்கொன்று விடுவதாகக் கூறியது தொடர்பாக உடன் விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபரையும் ஆளும் ஐ.தே.முன்னணியையும் ஊடகத்துறைச் சங்கம் கேட்டுள்ளது.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்க என்பவர் மேற்படி அமைச்சர் தொடர்பான பல மோசடிச் செய்திகளை வெளியிட்டதை அடுத்து ஆத்திரமுற்ற விஜயசேகர அண்மையில் பாராளுமன்றத்தில் வைத்து மேற்படி பத்திரிகையின் ஆசிரியரை அச்சுறுத்தியுள்ளார் என்பது தெரிந்ததே.

சண்டே லீடர் பத்திரிகையில் முன்பு நடந்த கொலைகள், கொலை முயற்சிகள் தொடர்பாக இவர் சம்பந்தப்பட்ட செய்திகள் பிரசுரிக்கப்பட்டது. இதனாலேயே அமைச்சர் ஆத்திரமடைந்து மேற்படி அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

அமைச்சர் விஜயசேகர கடந்த பொ.ஐ.மு. அரசு காலத்தில் 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன், சண்டே லீடர் பத்திரிகையின் லசந்த விக்கிரமதுங்க, 'சட்டன' ஆசிரியர் ரோகணகுமார என்போரைக் கொலை செய்யத் திட்டமிட்ட குழுவினரில் ஒருவராக செயற்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குழுவின் கட்டளைப்படி ரோகண குமாரவை கொலை செய்ததாகவும் ஏனைய இருவரையும் கொலை செய்ய முன்பு தமக்கு கட்சியைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று என்றும் கூறியிருக்கின்றார். இதன்போது பிரதியமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்ன, மகேஸ்வரன், பண்டாரநாயக்க எனப் பலர் இருந்ததாகவும் லசந்த விக்ரமதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த அமைச்சர் மேற்படி கொலைப் பயமுறுத்தல் செய்தது இது முதல் தடவையல்ல எனக்கூறும் ஊடகத்துறைச் சங்கம், விக்ரர் ஐவன், விக்ரமதுங்க போன்றோர் மீது சனாதிபதி ஆத்திரமடைந்திருந் ததாகவும் ஊடகத்துறைச் சங்கம் தெரிவிக்கிறது.

# முஸ்லிம் காங்கிரஸ் தன் நிலைப்பாட்டை அரசிடம் தெளிவாக முன்வைக்க வேண்டும்

### -ரேலோ அமைப்பின் செயலாளர் வலியுறுத்து

இடைக்கால நிர்வாகம் மற்றும் அரசியல்தீர்வு போன்ற விடயங்களில் முஸ்லிம் காங்கிரஸ் தனது நிலைப்பாட்டை அரசிடம் தெளிவாக முன்வைக்க வேண்டுமென ரெலோ அமைப்பின் செயலாளர் இந்திரகுமார் பிரசன்னா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புலிகள் தமது கோரிக்கைகளை முன்வைக்கும் போது அதில் பங்குகேட்டு அடம்பிடிப்பது சமாதான நடவடிக்கைகளுக்குப் பாதகமாகவே அமையுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இடைக கால நிர்வாகம் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை புலிகள் முன் வைத்த பின்னர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது வரைவை முன்வைக்கவுள்ளதாக அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் கூறியுள்ளார்.

இது தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகங்களை தோற்றுவித்துள்ளதாகவும், அப்பாவி முஸ்லிம் மக்களைப் பலிக்கடாக்களாக மாற்றி முஸ்லிம் அரசியல் வாதிகள் சந்தர்ப்பவாத அரசியலை நடாத்துவதாகவும் அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். அத்துடன் இரத்தக்கறை படிந்த வரலாறுகளை மறந்து தமிழர்களுடன் இணைந்து முஸ்லிம்களும் உரிமைகளுக் காகக் குரல் கொடுக்க வேண்டுமென வேண்டுகோள்விடுத்துள்ளார்.

# இடைக்கால நிர்வாக அமைப்பிற்கு 77 சிங்கள அமைப்புக்கள் எதிர்ப்பு

### - பிக்குகளும் கல்விமான்களும் தலைமை வகிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்படவுள்ள வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை முறைக்கு 77தென்னிலங்கைச் சிங்கள அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இந்த அமைப்புக்களின் தலைவர்களாக பௌத்த பிக்குகளும் கல்விமான்களும் செயற்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற ஒன்றுகூடல் ஒன்றின்போது பிக்குஒருவரால் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்போது இடைக்கால நிர்வாகம் வழங்குதலையும் வடக்கு கிழக்கு இணைப்பையும் எதிர்ப்பதாகவும் பயங்கரவாதத்தை ஒழிப்பதாகவும் நோர்வே தலைமையிலான மேற்கு நாடுகளைத் துரத்திவிடுவதையும் குறிப்பாகக் கொண்டு ஒத்துழைப்புப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும் இவை தொடர்பாக பிரேரணை ஒன்றைத் தயார்ப்படுத்தி சனாதிபதியிடமும் பிரதமரிகுவிடமும் கையளிக்க தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் இவ்வமைப்புக்களுக்கெதிராக செயற்படுவோரை கண்காணிக்கும்வகையில் ஆங்காங்கு கண்காணிப்பு நிலைகள் ஏற்படுத்தவும் இணக்கம் காணப்பட்டதாக கூட்டத்தில் தலைமை வகித்த பிக்கு சந்திராலோக கூறியுள்ளார்.

# சீன ரசிகர்களின் அன்பால் பெக்காம் திணறல்

உலகைப் புகழ்பெற்ற கால்பந்து வீரரும், இங்கிலாந்து அணியின் தலைவருமான டேவிட் பெக்காம், சீனாவில் நடைபெறும் கால்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ள சீனா சென்ற போது அந்நாட்டு ரசிகர்கள் தங்களது அன்பால் பெக்காமை திணறடித்துள்ளனர்.

பிரிட்டன், ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் முன்னணிக் கால்பந்தாட்ட வீரர்களடங்கிய அணியினர். ஆசிய நாடுகளுடன் நட்பு ரீதியில் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதையொட்டி சீனா சென்றுள்ளனர்.

சீனத் தலைநகர் பீஜிங்கிலுள்ள மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் றியல் மெட்ரிட் அணியுடன் சீன நாட்டின் அணியினர் களத்தில் இறங்கினர்.

றியல்மெட்ரிட் அணியினர் 04 கோல்களை அடித்தனர். அவர்கள் அபாரமாக விளையாடி, மற்றைய அணியினரை ஒரு கோல் கூடப் போடவிடாதவாறு தடுத்து விளையாடினர்.

இந்நிலையில் சீன நாட்டில் பெக்காம் ஆதரவு பரவிவருகின்றது. ஏராளமான ரசிகர்கள் டேவிட் பெக்காமை வரவேற்று அவரைத் தமது அன்பால் திணறடித்துள்ளனர்.

### 1–வது ஒருநாள் போட்டியில் அவுஸ். 8 விக்கெட்டுக்களால் வெற்றி


அவுஸ்திரேலியா- பங்களாதேஷ் அணிகளுக்கிடையே அவுஸ்திரேலியா- செயான்ஷிப் நடைபெற்ற முதலாவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலியா எட்டு விக்கெட்வித்தியாசத்தால் பங்களாதேஷ் அணியை வென்றுள்ளது.

போட்டியில் முதலாவதாக துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 34 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 105ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய அவுஸ்திரேலியா அணி 22.3ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர் பிரெட்லீ 8 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 4விக்கட்டுக்களை வீழ்த்தி ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.

இரண்டாவது போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை டார்வனில் நடைபெறும்.



# சனாதிபதி முரண்பாடுகளைக் கைவிட்டு சமாதான முயற்சிகளுக்கு [illegible] வேண்டும்

## பௌத்த மதத்தலைவர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி முரண்பாடுகளைக் கைவிட்டு புரிந்துணர்வுடன் செயற்பட்டு சமாதான முயற்சிகளை தளரவிடாது பார்க்க வேண்டும் என்று மதத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வணக்கத்திற்குரிய புத்திரகித்த தேரர் வடகிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதேவேளை வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக கட்டமைப்புத் தொடர்பான விவகாரத்தில் சிறிலங்கா சனாதிபதி இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்து வருவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதனால் கொழும்பு அரசியலில் முரண்பாடுகளும் சமாதான முனைப்புக்களில் தேக்கமும் ஏற்படக்கூடிய சாத்தியமிருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# ஐ.நா.படைத்தளம் ஒன்றை சிறிலங்காவில் அமைக்க அனுமதி

ஐக்கிய நாடுகள் அமைதிப் படைத் தளம் ஒன்றை சிறிலங்கா சிங்கராஜா வனத்தின் எல்லைப்புறமொன்றில் அமைக்க சிறிலங்கா அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. குகுலுகங்கை திட்டத்தின் கீழுள்ள வீடமைப்பு திட்டமொன்றே இதற்கென வழங்கப்பட்டுள்ளது. இந்தப் படைத்தளம் ஆசியாவுக்கான ஐக்கிய நாடுகள் சபையில் அமைதிகாக்கும் படையின் பயிற்சி முகாமாகப் பயன்படுத்தப்படும். இதற்கென அரசாங்கம் 500 ஹெக்டேயர் பரப்பளவுள்ள நிலத்தைக் கையளிக்க சம்மதம் தெரிவித்துள்ளது.

ஐ.நா படையின் உயர் அதிகாரிகளும்அமெரிக்கப்படை உயரதிகாரிகளும் இவ்விடத்திற்குச் சென்று பார்வையிட்டுள்ளனர். சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன இவர்களுக்கு உதவினார். இது தொடர்பான அறிக்கை ஐ.நா. படை நடவடிக்கை நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியிலிருந்து இத்தளம் முழுமையாக இயங்கத் தொடங்கும் எனவும முதல் தொகுதியில் வெளிநாட்டு இராணுவத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் பயிற்சி பெறுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# விசுவமடுவில் பன்றி கடித்து குடும்பஸ்தர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

பன்றி கடிதத்தில் குடும்பஸ்தர் ஒருவர் இடதுகையில் படுகாயங்களுக்குள்ளானார். மேற்படி சம்பவம் நேற்றுக் காலை 9.00 மணியளவில் விசுவமடுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வேட்டைக்குச் சென்ற நபர் பன்றியைக் கண்ணுற்று வெடி வைத்த பொழுது வெடி குறி தவறியதின் விளைவாகப் பன்றி மேற்படி நபரைத் துரத்திவரவே அவர் வாய்க்கால்ஒன்றில் விழுந்த பொழுது துரத்தி வந்த பன்றி நபரின் இடது கையினைக் கடித்தாகவும் காயமடைந்தவர் தெரிவித்துள்ளார். இவர் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். - (ஷோ)

### வடமராட்சி....

இடம் பெற்றது. படைத்தரப்பின் சார்பில் வடமராட்சிப் பகுதியில் நிலைகொண்டுள்ள 524 ஆவது படையணியின் கட்டளைத்தளபதியான லெப்.கேணல் பல்காகொட, மற்றும் கேணல் ரட்ணாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் கரையோரப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படைப் பிரிவுகளின் இடைநிலையதிகாரிகளும் சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

சர்வதேசக் கண்காணிப்புக் குழுவின் கடற் கண்காணிப்பாளர்களின் பிரசன்னத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் மீனவ சங்கங்களின் சமரசத்தால் ஏற்கனவே கையளிக்கப்பட்டிருந்த மகஜரின் அடிப்படையில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இப் பேச்சுக்களில் வடமராட்சி வடக்கில் தொண்டமனாறு தொடக்கம் கற்கோவளம் வரையான கரையோரப் பகுதிகளில் உள்ள இறங்குதுறைக் கால்வாய்களை ஆழப்படுத்த படைத்தரப்பு தற்போது அனுமதித்துள்ளது.

எனினும் ஆழமாக்கும் போது அகற்றப்படும் முருகைக் கற்களை அப்பகுதியில் இருந்து எடுத்துச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த முப்பது வருட காலப்பகுதிக்கு மேலாக ஆழப்படுத்தப்படாது உள்ள கால்வாய்கள் புனரமைப்புச் செய்யப்படும் பொழுது படகுகளை நிறுத்தி வைத்தல் மற்றும் கரைபொதுங்கல் விடயங்களில் சுமுகமான தீர்வு கிட்டும் என மீனவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, பருத்தித்துறையின் கற்கோவளம், தும்பளை கடற்பரப்பில் பகலில் 10 மணிமுதல் மாலை ஆறு மணி வரை மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடையும் நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த படைத்தரப்பு அவ்வாறு படையினரால் மீனவர்கள் தடுக்கப்படுவதாகத் தெரியப்படுத்தப்பட்டால் அவ்விடயத்தில் தொடர்புடைய படையினர் மீது தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளனர்.

அத்துடன் மீனவர் தொழிலுக்குச் செல்வதற்குச் சோதனை நடவடிக்கையைத் துரிதப்படுத்துவதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர். ஆனாலும் பாஸ் நடைமுறை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் தெரிவித்துள்ளனர். (27,33)

### இருதரப்பினாலும்...

நடைமுறைச் சாத்தியமான திட்டத்தை முன்வைப்பது அவசியம்.

இவ்வாறான போதுமானளவு முன்னேற்றங்களுடனேயே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவது எம் விருப்பமும் கூட. இலங்கை. குறிப்பா வடக்கு-கிழக்கு தமிழரின் கலை, பண்பாடு, சமூக கலாச்சாரங்களின் பாரம்பரிய பூமியாக விளங்கியது இதனை நாலும், ஜப்பான் அரசும் நன்கு அறிவோம். ஆனால், கடந்த 20 ஆண்டு காலமாக இது சீரழிந்து கிடக்கிறது. இதனைப் புனரமைப்புச் செய்வதற்கான தேவையை உணர்ந்து ஜப்பானிய அரசும், சர்வதேச சமூகமும் உதவி செய்ய முன்வந்துள்ளது. இதனை வலுவுள்ளதாகப் பயன்படுத்துவதற்குப் புலிகளுடனான பேச்சும், அதனூடான சமாதானமும் அவசியம்.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஜப்பான் தன் பங்களிப்பைச் செய்யத் தயாராக உள்ளது. டோக்கியோ மாநாடு பிரகடனத்திற்கு அமைய நான்கு வருடங்களுக்குத் தலா ஒரு மில்லியன் டொலர்களை வழங்குவதற்கும் ஜப்பான் அரசு தீர்மானித்துள்ளது எனவும் தெரிவித்தார். அத்துடன் இராணுவம் நிலைகொண்டிருப்பதால் மீள் குடியேறும் வாய்ப்பினை இழந்து சமாதான காலத்திலும் அகதி முகாம்களில் வாழும் மக்களுடன் நேரில் சந்தித்துக் கலந்துரையாடி அறிந்தவற்றைக்கொண்டு பார்க்கும்போது நிரந்தர சமாதானமே இவர்களுக்கு நிரந்தரதீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுக்கும் என்றார். (33)

# புதனன்று முக்கிய கூட்டம்

(கொழும்பு)

ஜே.வி.பியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இணைவது குறித்து முக்கிய கூட்டம் ஒன்று எதிர்வரும் 6ம் திகதி சிறிலங்கா சனாதிபதி தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த உயர் மட்டக்கூட்டத்தில் இரு கட்சிகளும் இணைவதற்கான முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இரு கட்சிகளும் இணையும் பட்சத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள், கொள்கைகள் தேர்தல் முன்னெடுப்புகள் கட்சியின் உயர் பதவிகள், கட்சியின் செயற்பாடுகள் எனப் பல விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

### நெடுந்தீவில்...

விடுதலைப்புலிகளின் வருகையின் பின் எம் தீவகம் விடுதலை பெற்று எம் மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் தொடங்கினர். இங்கு வந்த விடுதலைப்புலிகள் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அதற்குப் பரிகாரம் தேடித்தந்தார்கள்.

எம் தீவகத்தில் உள்ள மாவட்ட வைத்தியசாலையானது ஒரு வைத்திய அதிகாரியும், ஒரு உதவி வைத்திய அதிகாரியும் கடமையாற்ற வேண்டிய வைத்தியசாலையாகும், தற்பொழுது ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி ஒருவரே கடமையாற்றி வருகின்றார். இவ் வைத்தியசாலையில் போதியளவு மருந்துப் பொருட்களும், மருத்துவ பரிசோதனை வசதிகளும் இல்லாமையினால் தீவக மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கிக் கொண்டிருந்த வேளையில், மக்களுக்கு மருத்துவ சேவை அளிக்கத் தீர்மானித்த விடுதலைப்புலிகள் 04.08.2002 அன்று எம் தீவில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையைத் திறந்து மருத்துவ சேவையை ஆரம்பித்தனர். அன்றிலிருந்து இரவுபகலாக எம் தீவக மக்களுக்கு மகத்தான சேவையை ஆற்றிவருவதுடன் இதுவரை காலமும் 12,627 இற்கும் அதிகமான நோயாளருக்கு சிகிச்சை அளித்துள்ளதுடன் 100 க்கு அதிகமான கண் பார்வையற்றவர்களைப் பரிசோதித்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கியதுடன் 50க்கு மேற்பட்டோருக்கு பற் சிகிச்சையும் அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மருத்துவ சேவையை ஆரம்பித்த காலத்திலிருந்து இரவுபகல் பாராது மக்களுக்கு சேவையாற்றிய, ஆற்றிக்கொண்டிருக்கின்ற மருத்துவப் போராளி பூவேந்தன் அவர்களையும், ஏனைய மருத்துவப் போராளிகளையும், மருத்துவ ஊழியர்களையும் மனதார நன்றிப் பெருக்குடன் பாராட்டுகின்றோம்.

ஓராண்டை நிறைவு செய்யும் இந்நாளிலும் துறைசார்ந்த மருத்துவ நிபுணர்களையும் அழைத்து சேவையாற்றுவது குறிப்பிடத்தக்கது. இன்றைய நிறைவுநாளை தீவக மக்கள் எழுச்சி பூர்வமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இம் மருத்துவ சேவையினை தீவகத்தில் நடாத்துவதற்கு சகல விதமான உதவிகளையும் வழங்கிக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் குறிப்பாக எமது தீவின் மருத்துவக் குறைபாட்டை அறிந்து கொண்டு உடனடியாக வீரம் விளையும் விளைநிலமான வன்னியில் இருந்து எம் தீவகத்திற்கு மருத்துவக் குழுவினரை அனுப்பி தியாக தீபம் திலீபன் மருத்துவசேவையை ஆரம்பித்த எமது தேசியத் தலைவர் மேதகு .வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு நெடுந்தீவு மக்கள் சார்பில் நன்றியையும், மனமார்ந்த பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

### 23 பேர்...

கைது செய்யப்பட்ட அனைவரும் துறைமுகப் பொலிசாரிடம் கையளிக் கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவி க்கப்பட்டுள்ளது.

சமீப நாட்களில் இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்ல முயன்ற 700 வெளிநாட்டவர்களைப் பொலிசார் கைது செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## - சிறிலங்கா படையின் -

# உளவுப் பிரிவின் முன்னாள் உறுப்பினர் திருமலையில் சுட்டுக்கொலை

திருமலையில் சிறிலங்கா படையினரின் உளவுப் பிரிவின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மூதூர் 59 ஆம் கட்டைப் பகுதியில் உள்ள ஜின்னா நகர் பிரதான வீதியில் வைத்தே நேற்று அதி காலை 4.00 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சுட்டுக்கொல்லப்பட்டவர் 35 வயதுடைய நூர்தின் தில்வான் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் மூன்று வருடங்களின் முன்னா திருகோணமலையில் செயற்பட்டுக் கொண்டிருந்த வேளை பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே மூதூரிலிலுள்ள தமது சொந்தக் கிராமத்தில் வசித்து வந்தவர் நேற்று அதிகாலை இனம் தெரியாதோர் இவரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

மூதூர் பொலிசார் இக்கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டிருக் கின்ற போதும் இக்கொலைக்கான காரணம் எதுவும் கண்டுபிடிக்கப்பட வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.இல். தப்பி ஓடிய சிப்பாய் ம.உ.ஆணைக்குழுவிடம் சரண்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் ராணுவச் சிப்பாய் ஒருவர் தப்பியோடி மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். செயலகத்தில் சரணடைந்துள்ளார்.

மானிப்பாயில் அமைந்துள்ள 513வது பிரிகேட் படைமுகாமில் கடமையாற்றும் அநுராதபுரத்தைச் சேர்ந்த பியந்த (வயது22) என்பவரே சரணடைந்தவராவார்.

மேற்படி ராணுவச் சிப்பாய் நேற்று மதியம் 12 மணியளவில் மனித உரிமை ஆணைக்குழுவில் வைத்து பலாலி படைஅதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

படை மேலதிகாரிகளின் துன்புறுத்தல் தாங்கமுடியாமலே தான் இவ்வழியைப் பின்பற்றியதாக மனித உரிமை ஆணைக்குழுவில் சிப்பாய் தெரிவித்துள்ளார். (33)

## - சண்டிலிப்பாய் பிரதேசத்தில் -

# ஆலய பரிபாலன சபைகளின் ஒன்றியம் நேற்று அமைப்பு

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பகுதிக்குள் உள்ளடக்கப்பட்ட இந்து ஆலயங்களின் பரிபாலன சபை அங்கத்தவர்கள் ஒருங்கிணைந்து நேற்று ஆலய பரிபாலன சபைகளின் ஒன்றியத்தை அமைத்துள்ளனர். இந்து ஆலயங்கள் வழிபாட்டு இடங்கள் என்பது மட்டுமன்றி, சமூக நலன செயற்பாடுகளுக்கான பொறுப்புடன் இயங்க வேண்டும் என்ற இலக் குடன் இவ்வொன்றியம் அமைக்கப் பட்டுள்ளது. நிர்வாகத் தெரிவில் ஆலய பரிபாலனசபைகளின் ஒன்றி யத் தலைவராகச் சாந்தகிருஷ்ணனும்,செயலாளராகப் பத்மநாதனும், பொருளாளராக அமிர்தலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

# அரசியல் பணிக்காக தமக்கும் உலங்கு வானூர்தி தேவையாம்

## சிஹல உறுமய கேட்கின்றது

தமது கட்சி வேலைகளுக்காகத் தமக்கு ஒரு உலங்கு வானூர்தி வழங்குமாறு சிஹல உறுமய கட்சித் தலைவர் திலக் கருணாரட்ண, சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவைக் கேட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தனது அரசியல் பணிகளுக்குச் செல்ல அரசாங்கம் உலங்கு வானூர்தியை வழங்குகிறது. வட்க்கு கிழக்கில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளத் தனது கட்சிக்கும் உலங்கு வானூர்தி தேவைப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அவ்வாறு உலங்கு வானூர்தியைத் தனது கட்சிக்கு வழங்க முடியாதுவிட்டால் ஏன் அவ்வாறு வழங்க முடியாது இருக்கிறது என்பதை அமைச்சர் திலக் மாரப்பன விளக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

### மீனவர்...

வலிகாமத்தில் இருந்து சென்ற செய்தியாளர்களே மேற்படி படையினரால் வாசலில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டதுடன் சிலரை புகைப்படமும் எடுத்துள்ளனர். சுமுகமாக நடைபெற்ற மேற்படி பேச்சுக்களுக்கு செய்தியாளர்கள் அனுமதிக்கப்படாமை அவர்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (33,27)

### ஜப்பானிய...

அமைப்புக்களின் ஒன்றியம், யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட ஆணைக்குழு, யாழ்.மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை என்பனவே இன்று பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மனுக்களை ஜப்பானிய அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளன. சிறிலங்கா படையினரது உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் மீன்பிடி, விவசாயம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் போரினால் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர முடியாமல் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் இந்த மனுக்களில் உள்ளடங்கி இருந்தன.

01 - 08 - 2003 தொடக்கம் 08 - 08 - 2003 வரை
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க கொடிவாரம்
ஊனமுற்றவர்களை எமது உடன் பிறப்புகளாக ஏற்று, சமுதாயத்தில் இலட்சிய மனிதர்களாக மாற்றுவோம்.
KAROD
(சி- 8451)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 04ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.